**கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கம்பனிகள் நிதியம் - 2014**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கம்பனிகள் நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, நிதியத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 479(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமனங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனிகள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனிகள் நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கம்பனிகள் நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 757,360 தொகையான நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக இடம்பெற்ற செலவுகள் வருமானச் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 94(1) | ஏனைய முறைகளில் ஒழுங்குவிதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர்த்து வருடாந்த மதிப்பீடுகளில் அதற்காக நிதி ஏற்பாடுகள் செய்யப்படாது விட்டால் எந்த ஒரு செலவுக்கோ அல்லது பொறுப்புக்கோ கடப்பாடு செய்யக்கூடாது என்ற போதிலும், வருடாந்த மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாது ரூபா 1,141,045 கூட்டுத்தொகையான செலவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் அச் செலவுகள் உரிய செலவுத் தலைப்புகளைத் தவிர்த்து ஏனைய செலவுத் தலைப்புகளுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 225(2)(அ) | வைப்புகளிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளுக்காக பொது 70 படிவம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,796,781 தொகையான செலவுகளுக்காக அப்படிவம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 395(இ) | வங்கி இணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் |

| | | |
|---|---|---|
| | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 05 வங்கி கணக்குகள் தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) நிதிப்பிரமாணம் 730(1) | பொருட்களின் சரி பிழை பார்த்த பின்னர் அவை பெற்றுக்கொள்ளப்பட்டமையை தெரியப்படுத்தி அப்பொருட்களைப் பொறுப்பேற்று, பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் உரிய முறைப்படி பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் இந்த ஒழுங்கு முறைகளுக்கு புறம்பாகச் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| | (v) நிதிப்பிரமாணம் 752(i), 752(ii), 752(iii) | பொருட்களை விநியோகிக்கும் போது பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் விநியோகித்தல் பக்கத்தில் விபரம் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ஆ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவை (i) 4.2.1 (உ) கொள்வனவுத் திட்டம் | ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்படுகின்ற பிரதான கொள்வனவுத் திட்டமானது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்தின் போது உரிய முறையில் நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.4 ஆம் பிரிவு | ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணம் செலுத்துவதற்கான பிணை சமர்ப்பிக்கும் அடிப்படையில் ஒப்பந்த தொகையில் ஆகக் கூடியது 20 சதவீதம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக நிதியத்தினால் சமாகம் மெதுர கட்டிடத்தை திருத்தம் செய்வதற்கான ஆலோசனை சேவைகளை வழங்குவது தொடர்பாக மஹாவலி ஆலோசனை சேவை பணியகத்திற்கு ஆலோசனை சேவை மதிப்பீட்டில் 50 சதவீத முற்பணத் தொகையாகிய ரூபா.250,000 செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 385,906,578 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 351,550,815 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 34,355,763 அல்லது 9.7 சதவீத முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. நிதி அறிக்கைகளைப் பதிவுசெய்தல் 245 சதவீதத்தினால் அதிகரித்தல் இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வருமான மூலத்திலஅதிகரிப்பு இடம்பெற்றிருந்த போதிலும் நிதி அறிக்கைகளைப் பதிவு செய்தல் வருமானம் 245 சதவீதத்தினாலும் செயலாளர்களைப் பதிவு செய்தல் வருமானம் 28 சதவீதத்தாலும்

அதிகரித்திருந்தும் விண்ணப்பப்படிவங்களைப் பதிவு செய்தல் மற்றும் ஆண்டிறிக்கைகளைப் பதிவுசெய்தல் வருமானம் அதிகரிக்கும் வேகத்துடன் ஒப்பிடுகையில் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டிற்காக கம்பனிகள் மற்றும் ஏனைய பதிவு செய்தல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றது.

| செயற்பாடு | எண்ணிக்கை | | வேறுபாடு குறைவடைதல் /அதிகரித்தல் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2014 | 2013 | | |
| கம்பனிகளைப் பதிவு செய்தல் | 7,100 | 6,047 | 1,053 | 17.41 |
| கோவைகளைப் பரீட்சித்தல் | 10,838 | 10,847 | (9) | (0.08) |
| பெயர்களை அங்கீகரித்தல் | 13,260 | 12,075 | 1,185 | 9.8 |
| பிரதிகளை சான்றுபடுத்தல் | 43,379 | 36,531 | 6,848 | 18.74 |
| விண்ணப்ப படிவங்களைப் பதிவு செய்தல் | 72,644 | 70,659 | 1,985 | 2.80 |
| ஆண்டறிக்கைகளைப் பதிவு செய்தல் | 31,324 | 29,853 | 1,471 | 4.93 |
| நிதி அறிக்கைகளைப் பதிவு செய்தல் | 2,376 | 2,867 | (491) | (17.12) |
| விண்ணப்ப படிவங்களை விற்பனை செய்தல் | 3,478 | 4,207 | (729) | (17.33) |
| செயலாளர்களைப் பதிவு செய்தல் | 566 | 437 | 129 | 29.52 |

நிதி அறிக்கைகளைப் பதிவு செய்தல், விண்ணப்ப படிவங்களை விற்பனை செய்தல், கோவைகளைப் பரீட்சித்தல் என்பவற்றின் வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது குறைவடைந்திருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பதிவுசெய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பனிகளில் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரையறுத்த கம்பனிகளின் எண்ணிக்கை 59,113 ஆகும். எவ்வாறாயினும் அத்திகதியில் உள்ளவாறு ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்த வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 14,886 ஆக இருந்ததனால் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பிக்காத வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 44,227 ஆக இருந்ததுடன் அதன் காரணமாக அத்திகதியில் உள்ளவாறு அறவிடப்படாத நிலுவையாகவுள்ள வருடாந்த அறிக்கைகளைப் பதிவுசெய்தல் வருமானம் ரூபா 221,135,000 ஆகும். இதில் ரூபா 147,423,333 தொகையானது கம்பனிகள் நிதியத்திற்கு நிலுவையாக இருந்ததுடன் திரண்ட நிதியத்திற்கு செலவுவைக்கப்படாத அளவு ரூபா 73,711,667 ஆகும்.

**(இ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) வரையறுத்த கம்பனிகளை நெறிப்படுத்துதல்**

கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வரையறுத்த கம்பனிகளைப் பதிவுசெய்தல் மற்றும் அதன் மூலம் பணிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதன் பிரகாரம் செயற்படுவதனைப் பார்த்துக் கொள்ளல், அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களில் கம்பனிகள் அதிகாரச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் செயற்பாட்டு பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் நடவடிக்கைகளை கம்பனிகள் கட்டளைச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு மேற்கூறிய கம்பனிகள் அதிகாரச் சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கையாக இருந்த போதிலும் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல் பலவீனமான நிலைமையில் காணப்படுவது தெரிவுக்கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறு கம்பனிகளின் நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கான செயல்திட்டம் ஒன்று கம்பனிகள் பதிவாளர் நாயகத் திணைக்களத்திடம் காணப்படவில்லை.

**(ii) கணக்காய்வாளர்களைப் பதிவுசெய்தலும் பதிவுகளைப் புதுப்பித்தலும்**

மீளாய்வாண்டின் போது 77 புதிய கணக்காய்வாளர்கள் புதிதாகப் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் அவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் ரூபா 136,590 ஆக இருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது புதிதாகப் பதிவுசெய்யப்பட்ட 74 நபர்களிடமிருந்து கிடைத்த வருமானம் ரூபா 9,900 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமானம் 1279 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் பதிவுசெய்த கணக்காய்வாளர்களைப் புதுப்பித்தல் 532 ஆக இருந்ததுடன் வருமானம் ரூபா 927,632 ஆக இருந்தது. முன்னயை ஆண்டில் அந்த எண்ணிக்கை 556 ஆக இருந்ததுடன் கிடைத்த வருமானம் ரூபா 12,232 ஆக இருந்தது. இவ்வாறு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மேற்கூறிய பதிவுசெய்தல்களை புதுப்பித்தல் எண்ணிக்கை 24 இனால் குறைவடைந்திருந்தும் வருமானம் ரூபா 915,400 ஆல் அதிகரித்தமைக்கு மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து புதிய கணக்கு பரிசோதகரைப் பதிவுசெய்தல் மற்றும் புதுப்பித்தல் கட்டணத்தை அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது 1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 67 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 9,325 ஆகும். கடந்த ஆண்டிற்காக 169 சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 4,225 ஆகும். மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட்டுவந்த முத்திரை வருமானத்தை இரத்துச் செய்து கட்டணம் அறவிடும் முறைமையை அறிமுகப்படுத்தியமை வருமானம் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

(உ) 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், ரூபா 5 மில்லியனை மிகைக்கும் அனைத்து ஒப்பந்த கம்பனிகளும் பதிவாளர் நாயகத்தின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டின் போது பதிவுசெய்யப்பட்டிந்த பொது ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 10,384 ஆக இருந்ததுடன் அவற்றிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 17,016,000 ஆகும். முன்னைய ஆண்டின் போது அந்த அளவு 4320 ஆக இருந்ததுடன் கிடைத்த வருமானம் ரூபா 6,966,000 ஆகும். அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது

பதிவுசெய்யப்பட்டிருந்த பொது ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 6,064 ஆல் அதிகரித்திருந்ததுடன் அது 140 சதவீதமாகும்.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) மீள் கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்**

வரையறுக்கப்பட்ட கம்பனிகளைப் பதிவுசெய்தல் நடவடிக்கைகளை கணனிமயப்படுத்தல் செயற்திட்டம் தொடர்பான ஒப்பந்தம் 2014 சனவரி 21 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்திற்கு ரூபா 88,812,227 தொகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் அவற்றின் செயற்பாடுகள் 2014 ஒக்டோபர் 20 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் தற்பொழுது ஒப்பந்தக்காரர் அவ்வேலைகளை இடைநடுவில் நிறுத்தி ஒப்பந்தத்தைக் கைவிட்டுச் சென்றிருந்தார். ஒப்பந்தத்தை உரிய நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் கம்பனிகள் மற்றும் சங்கங்களின் 61,000 கோவைகளை ஸ்கேன் பண்ணுவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் 33,938 எண்ணிக்கையான ஒப்பந்தக் கோவைகள் மாத்திரம் ஸ்கேன் செய்யப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் ஒப்பந்த நடவடிக்கைகளை முறைப்படியாகச் செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் இடம்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன், பின்தொடர் நடவடிக்கைகளும் செயல் முன்னேற்ற மீளாய்வுச் செயற்பாடும் இடம்பெற்றிருக்கவில்லை. ஒப்பந்தம் தொடர்பான கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 (அ) பிரிவின் பிரகாரம் செயலாற்றல் பிணை முறி ஒன்று ஒப்பந்தக்காரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படாது ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக தற்பொழுது செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ள மற்றும் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தைக் கைவிட்டும் சென்றுள்ள இச்செயற்திட்டத்திற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 13,619,577 தொகைப் பணம் விளைவற்ற செலவாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நிதியத்தினால் இதன் பிரயோசனத்தை கவனத்தில் கொள்ளாது செலவுசெய்யப்பட்ட அனைத்துப் பணமும் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) சமாகம் மெதுர கட்டிடத்தை திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தம் ஒரு தனியார் கம்பனிக்கு ரூபா 12,664,317 தொகைக்கு 2014 ஏப்ரல் 23 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி அவ்வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் இது வரையிலும் அவ்வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. வேலைகளின் தாமதம் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

கம்பனிகள் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் கட்டிட திருத்தத்தின் போது கழற்றி அப்புறப்படுத்தப்பட்ட கண்ணாடிகள் தொடர்பான விபரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட்கணிப்புச் சபையின் அறிக்கையின் மூலம் காட்டப்படாதிருந்ததுடன் அவற்றின் பெறுமதியும் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பாதுகாப்பின்றி இடத்துக்கிடம் கைவிடப்பட்டு உடைந்து காணப்பட்ட இக்கண்ணாடிகளைச் சேகரித்து ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செலவுகளையும் நிதியத்திலிருந்து மேற்கொள்ள இயலுமான போதிலும், கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 4 ஆவது உப பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுக்குள் கொண்டுவரப்படாத வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றிற்குச் சொந்தமான பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 90,275,000 செலவு செய்யப்பட்டிருந்தது. இதுவரை இந்த முதலீட்டிலிருந்து எதுவித பிரதிபலனும் கம்பனிகள் நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே இப்பங்குகளின் உரிமையானது கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சிற்கு உரித்தாகவிருந்தது. உரிய கம்பனிகள் செயலிழந்தமையின் காரணத்தால் அவற்றைக் கலைப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் மேற்கூறிய முதலீடு செய்யப்பட்ட பணத்திற்குரிய உரிமை அல்லது முதலீடு செய்யப்பட்ட பணத்தை கம்பனிகள் நிதியத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கு எதுவித நடவடிக்கையும் இன்றுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனிகள் நிதியத்தின் குறிக்கோள்கள் மற்றும் நடவடிக்கைகளுக்குப் புறம்பான நடவடிக்கைகள் தொடர்பாக பத்திரிகை விளம்பரங்களை வெளியிட்டதற்காக ரூபா 599,200 கூட்டுத்தொகையான பணம் மீளாய்வாண்டின் போது நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்டிருந்தது.

**4.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிகள் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் நடவடிக்கைகளை கணனிமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஸ்கேன் பண்ணப்பட்ட (Scan) கோவைகளை வைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 453,750 பெறுமதியான 15 இறாக்கைகள் பயன்படுத்தப்படாது ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீள்கட்டமைப்பின் கீழ் ஸ்கேன் பண்ணப்பட்ட (Scanned) ஆவணங்களை மீண்டும் கோவை செய்வதற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ரூபா 2,180,000 பெறுமதியான கோவைகள் (Four holes files) 2011 நவம்பர் 24 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அவற்றில் 54,500 எண்ணிக்கையான கோவைகள் இதுவரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 தெயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டத்திற்கு நேர் இணைந்ததாக பாடசாலை நூல்நிலையங்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 683,910 பெறுமதியான புத்தகங்கள் பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. அப்புத்தகங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக எதுவித நடவடிக்கையும் 2015 மார்ச் 27 ஆந் திகதி வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனிகள் பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்றை தனியாக ஸ்தாபிப்பதற்காக ரூபா 147,360 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பிரிவு தற்பொழுது செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. இதன் காரணமாக மேற்கூறிய பணத்தை செலவு செய்து இப்பிரிவிற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கணனியும் இணையத்தள வசதிகளும் குறைந்த பயன்பாட்டு நிலைக்கு மாறியிருந்தது.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிகள் பதிவாளர் நாயகத் திணைக்களத்தினதும் கம்பனிகள் நிதியத்தினதும் பிரதான நிறைவேற்றுப் பதவியான ‘‘கம்பனிகள் பதிவாளர் நாயகம்‘‘ பதவிக்காக 4 ஆண்டுகள் வரையான காலமாக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாது கடமைகளை மேற்கொள்வதற்கு மாத்திரம் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் அங்கீகரித்த பதவியணியில் காணப்பட்ட கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவி மற்றும் 7 உதவி கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவிகளில் 3 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) 8 தொழில் முயற்சி மீளாய்வு உதவி உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனிகள் பதிவாளர் நாயகத் திணைக்களத்திற்கான விசேட பதவியாகிய ‘‘கம்பனிகள் பரிசோதகர்‘‘ என்ற 4 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் தற்பொழுது ஒரு கம்பனிகள் பரிசோதகர் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தார். இதன் காரணமாக கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறிய கம்பனிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல், கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்காக நீதிமன்றத்தில் தோன்றுதல் ஆகிய செயற்பாடுகளுக்காக இந்நிலைமை நேரடியாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) கம்பனிகள் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் நடவடிக்கைகளை மாவட்ட மட்டத்தில் விஸ்தரிப்பதற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டு மாவட்ட செயலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 12 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வை செய்வதற்கான முறைமை ஒன்று நிறுவனத்திடம் காணப்படாததுடன் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை 162 ஆக இருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இங்கு காணப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 104 ஆகும். அதன் பிரகாரம் 58 உத்தியோகத்தர்கள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் கம்பனிகள் அதிகாரச் சட்டத்தை அமுல்படுத்தும் போது இது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதனை கணக்காய்வில் மறுக்க முடியாதுள்ளது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நிதியத்தினால் அதனது குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு நடவடிக்கைகளின் தன்மை மற்றும் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களும் பிரிவும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக எடுக்கப்படுகின்ற காலம் என்பன தனித்தனியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க கணக்காய்வின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நிதியத்தின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல் சிக்கலானதாகக் காணப்பட்டது.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய பீஎம்.ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் போதியளவான உள்ளகக் கணக்காய்வானது கம்பனிகள் நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக்கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவுகளுக்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே 04 சதவீதத்திலிருந்து 78 சதவீதம் வரையிலான வீச்சுடைய முரண்களும் பாதீடு செய்யப்பட்ட வருமானங்களுக்கும் உள்ளபடியான வருமானங்களுக்குமிடையே 42 சதவீதத்திலிருந்து 70 சதவீதம் வரையிலான வீச்சுடைய முரண்களும் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் அவ்வப்போது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) செயற்திட்டங்களை அமுல்படுத்தல்
(ஆ) வரையறுக்கப்பட்ட கம்பனிகளை நெறிப்படுத்துதல்
(இ) கொள்வனவு
(ஈ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(உ) மனித வளங்கள் முகாமைத்துவம்